# தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

### இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் (SLBFE) பதிவு செய்துகொண்டு புலம்பெயரும் தொழிலாளர்களின் கடவுச்சீட்டுகளுக்கு ஒட்டுவதற்காக பாதுகாப்பு முத்திரையை அச்சிட்டு வழங்குவதற்கான விலைக்கோரல் அழைப்பு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் (SLBFE) பதிவு செய்துகொண்டு புலம்பெயரும் தொழிலாளர்களின் கடவுச்சீட்டுகளுக்கு ஒட்டுவதற்காக பாதுகாப்பு முத்திரையை அச்சிட்டு வழங்குவதற்காக திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் வழங்கப்படும் மாதிரியின் பிரகாரம் விபரக்குறிப்புகளை உள்ளடக்குதல் வேண்டும்.

மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா கட்டணத்தை 2023-11-13ஆம் திகதி முதல் 2023-12-04ஆம் திகதி வரையில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணிக்கிடையில் செலுத்தி மற்றும் எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றுடன் நிறுவனத்தின் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் (BRC) மூலப்பிரதி மற்றும் புகைப்படப் பிரதியொன்றையும் சமர்ப்பித்து பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் 2ஆம் மாடி, முகாமையாளர் (பெறுகை) அவர்களிடமிருந்து விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரப் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி உறுதிசெய்து கொண்டதன் பின் அதே நாளில் மீளளிக்கப்படும்.

விலைமனுதாரர்கள் இலங்கையில் செயற்படும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 50,000.00 ரூபாவிற்கான வங்கி உத்தரவாதமொன்றை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவரின் பெயரில் பெற்று விலைக்கோரல் பிணை முறியாக விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 2ஆம் மாடி, பெறுகை பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் விலைமனுக்களை உள்ளிடலாம்.

2023-12-06ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கும் வேளையில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 2ஆம் மாடி, பணிப்பாளர் சபை அறையில் 2023-11-22ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

எந்தக் காரணத்தைக் காட்டாமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் எந்தவொரு விலைமனுவையும் தயாரித்தல் தொடர்பிலான நேரடியான அல்லது மறைமுகமான எவ்விதமான செலவையும் மீள்செலுத்தும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இது தொடர்பில் அமைச்சுப் பெறுகைக் குழுவின் தலைவரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

மேலதிக விபரங்களை பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பெறுகை முகாமையாளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி: 011-2887585 / 011-288 0550** **மின்னஞ்சல்: mgr_procurement@slbfe.lk**

**அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்.**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்.**